சின்னச் சின்னதாய்...

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த மண்டல அளவிலான புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கோவை கூடுதல் தொழிலாளர் ஆணையர் மா.சாந்தி பேசினார். அருகில், தொழிலாளர் துறை, காவல்துறை அதிகாரிகள் உள்ளனர்.

புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கான கோவை மண்டல அளவிலான குழு கூட்டம்

கோவை

புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கான கோவை மண்டல அளவிலான குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோவை கூடுதல் தொழிலாளர் ஆணையர் மா.சாந்தி தலைமையில் நடந்தது. கோவை, ஈரோடு தொழிலாளர் இணை ஆணையர்கள் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, திருப்பூர், தருமபுரி மாவட்டங்களைச் சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்கள், காவல்துறையினர், தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்), தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ராயல் பெங்கால் அசோசியேஷன், உட்கல் அசோசியேஷன் ஆப் மெட்ராஸ் ஆகிய வெளி மாநில தொழிலாளர்களுக்கான மாநில அமைப்பு பிரதிநிதிகளும், சைமா, திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் ஆகிய வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வெளிமாநில தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் இடங்கள் மற்றும் நிறுவனங்களை கண்டறிதல், சிறப்பு முகாம்கள் அமைத்து அனைத்து வெளிமாநில தொழிலாளர்களை https://labour.tn.gov.in/ism என்ற இணையதளத்தில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல், வெளிமாநில தொழிலாளர்களுக்கு தங்களுடைய சட்ட உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சிறப்பு முகாம்கள் அமைத்து அனைத்து வெளிமாநில தொழிலாளர்களை தமிழ்நாடு கட்டுமான நலவாரியத்தில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல், eShram வலைதளத்தில் பதிவு செய்தல் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

பேக்கரி டீ மாஸ்டர் கொலை வழக்கில் இளைஞர்கள் 2 பேர் கைது

பல்லடம்

பல்லடம் அருகே அருள்புரம் பகுதியில் தனியார் மதுபானக் கூடத்துக்கு எதிரே 40 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் கிடப்பதாக பல்லடம் போலீஸாருக்கு கடந்த 7–ம் தேதி பொதுமக்கள் தகவல் அளித்தனர். அங்கு போலீஸார் சென்று சடலத்தை கைப்பற்றி விசாரித்தனர். சடலமாக கிடந்தவர், பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த பூபாலன் (42) என்பதும், பல்லடம் குன்னாங்கல்பாளையம் பிரிவு அருகே உள்ள பேக்கரியில் டீ மாஸ்டராக வேலை பார்த்து வந்ததும் தெரியவந்தது. அவரை மர்மநபர்கள் கல்லால் தாக்கி கொலை செய்ததும் தெரியவந்தது.

அப்பகுதியில் இருந்த சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை கைப்பற்றி போலீஸார் விசாரித்து வந்தனர். இந்நிலையில், ஆறுமுத்தாம்பாளையம்–சேகாம்பாளையம் சாலையில் சந்தேகப்படும்படியாக 2 பேர் பதுங்கி இருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, 2 பேரையும் பிடித்து போலீஸார் விசாரித்தனர். அவர்கள், நாகை மாவட்டத்தை சேர்ந்த விஜய் (22), ஈரோட்டை சேர்ந்த சரவணன் (30) என்பது தெரியவந்தது. மேலும், கடந்த 6–ம் தேதி இருவரும் மது அருந்திவிட்டு, பூபாலனிடம் புகையிலைப் பொருள் கேட்டபோது எழுந்த தகராறில், பூபாலனை கல்லால் தாக்கி கொலை செய்ததும் விசாரணையில் தெரியவந்தது. இருவரையும் பல்லடம் போலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இருசக்கர வாகனம் மீது பேருந்து மோதிய விபத்தில் உடற்கல்வி ஆசிரியர் உயிரிழப்பு

உடுமலை

உடுமலை அருகே தும்பலப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் குருபிரசாத் (27). தனியார் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக பணியாற்றி வந்தார். நேற்று உடுமலையில் இருந்து தனது இருசக்கர வாகனத்தில் பள்ளிக்கு சென்றார். உடுமலை– தாராபுரம் சாலை தாந்தோணி பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, உடுமலையை நோக்கி எதிரே வந்த அரசுப் பேருந்து மோதியது. இதில், குருபிரசாத் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்து மடத்துக்குளம் போலீஸார் வழக்கு பதிவு செய்து, சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

திருப்பூரில் நாட்டுவெடி தயாரித்தபோது நிகழ்ந்த

வெடி விபத்தில் மேலும் ஒரு சிறுமி உயிரிழப்பு

பட்டாசுக்கடை உரிமையாளர் உட்பட 2 பேர் கைது

திருப்பூர்

திருப்பூரில் அனுமதியின்றி வீட்டில் நாட்டுவெடி தயாரித்தபோது நிகழ்ந்த வெடி விபத்தில் குழந்தை உட்பட 3 பேர் ஏற்கெனவே உயிரிழந்த நிலையில், கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 6 வயது பெண் குழந்தை நேற்று உயிரிழந்தது. இவ்வழக்கு தொடர்பாக 2 பேரை திருமுருகன்பூண்டி போலீஸார் கைது செய்தனர்.

திருப்பூர் பாண்டியன் நகர் பொன்னம்மாள் வீதியைச் சேர்ந்தவர் கார்த்திகேயன் (40). இவர் தனது வீட்டில் முறைகேடாக நாட்டுவெடி தயாரித்து, ஈரோடு மாவட்டம் நம்பியூரில் பட்டாசுக்கடை நடத்திவரும் தனது மைத்துனர் சரவணக்குமார் (35) என்பவருக்கு வழங்கி வந்தார். நேற்று முன்தினம் வீட்டில் நாட்டு வெடி தயாரித்துக் கொண்டிருந்தபோது, வெடிவிபத்து நிகழ்ந்தது. இதில் சுள்ளான் (எ) குமார் (23), 9 மாத பெண் குழந்தை ஆலியாசிரின், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த விஜயா (52) ஆகியோர் உயிரிழந்தனர்.

மேலும், 6 குழந்தைகள் உட்பட 14 பேர் படுகாயமடைந்தனர். இவர்கள், திருப்பூர் மற்றும் கோவை மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதில், கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மேற்கு வங்கத்தை சேர்ந்த நிரஞ்சனா என்ற 6 வயது சிறுமி நேற்று உயிரிழந்தார்.

கார்த்திகேயன், சரவணக்குமார் மீது வெடிபொருள் சட்டம் பிரிவு 3, உயிர் அல்லது உடைமைக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் வெடி வைத்திருந்ததற்காக தண்டனை மற்றும் 5ஏ சொத்தை பறிமுதல் செய்தல் மற்றும் வெடிபொருள் சட்டம் பிரிவு 9பி உற்பத்தி, இறக்குமதி அல்லது ஏற்றுமதி ஆகிய 3 பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்கு பதிந்து, 2 பேரையும் கைது செய்தனர்.

இதுதொடர்பாக திருப்பூர் மாநகர காவல் ஆணையர் லட்சுமி கூறும்போது, "கைதான இருவரும் கடந்த 2 வாரங்களாக நாட்டு வெடி தயாரித்து வந்தது விசாரணையில் தெரியவந்தது. 25 கிலோ நாட்டு வெடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. வெடித்த வெடிகளின் எண்ணிக்கை தெரியவில்லை. சரவணகுமாருக்கு கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்துடன், ஈரோடு மாவட்டத்தில் வெடி தயாரிப்புக்கான உரிமம் முடிந்து விட்டது. உரிமம் புதுப்பிக்கப்படவில்லை" என்றார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் கூறும்போது, "பட்டாசு உற்பத்திசெய்ய அரசு அனுமதி பெறப்பட்ட வளாகங்களில் மட்டுமே பணிகள் நடைபெற வேண்டும். பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளில் பட்டாசு உற்பத்தி செய்யப்படுவது கண்டறியப்பட்டால், தொடர்புடைய நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற விதிமீறல் புகார்கள் இருந்தால் 1077 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பொதுமக்கள் புகார் அளிக்கலாம்" என்றார்.

நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

மார்க்சிஸ்ட் கட்சியின் திருப்பூர் மாவட்ட செயலாளர் செ.முத்துக்கண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை: வெடி விபத்தில் காயமடைந்த, பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான சிகிச்சை வழங்கவும், வீடுகள், உடைமைகள் இழந்தவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என கூறப்பட்டுள்ளது.

வாகனங்களில் விதிமீறி ஒட்டப்பட்ட ஸ்டிக்கர்கள் அகற்றம்

உதகை

நீலகிரி மாவட்டத்தில் 'பிரஸ்' எனவும், அரசு மற்றும் தனியார் துறைகளின் ஸ்டிக்கர்களை வாகனங்களில் ஒட்டிக்கொண்டு போக்குவரத்து விதிகளை மீறி பயணம் செய்வதாக மாவட்ட நிர்வாகத்துக்கு புகார் வந்தது. இதையடுத்து, மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா உத்தரவின்பேரில், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தியாகராஜன் தலைமையில் சேரிங்கிராஸ் பகுதியில், வாகன சோதனை நடந்தது. அதில், விதிமீறி வாகனங்களில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கர்கள் அகற்றப்பட்டன.

இதுதொடர்பாக வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தியாகராஜன் கூறும்போது, "போக்குவரத்து விதிகளை மீறி வாகனங்களில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கர்களை அகற்றும் பணி தொடர்ந்து நடைபெறும். அதில், அரசுத் துறைகள், 'பிரஸ்' என ஸ்டிக்கர்களை ஒட்டிக் கொண்டு உலாவரும் போலி நபர்கள் மீதும், போக்குவரத்து விதிமீறும் நபர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

உதகையில் போக்குவரத்து விதிகளை மீறி, வாகனங்களில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கர்களை அகற்றும் பணியில் ஈடுபட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள். படம்: ஆர்.டி.சிவசங்கர்

வன விலங்குகள் வேட்டையில் ஈடுபட முயன்ற 5 பேர் கைது

உதகை

உதகை அருகே வன விலங்குகள் வேட்டையில் ஈடுபட முயன்றதாக 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து துப்பாக்கி, கத்திகள் பறிமுதல் செய்யப்பட்டன.

உதகை அருகே உள்ள முத்தோரை பாலாடா பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஊரக காவல் நிலைய ஆய்வாளர் பாபு தலைமையிலான போலீஸார் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அவ்வழியே வந்த காரை நிறுத்தி போலீஸார் சோதனை நடத்தினர்.காரில் அனுமதி இல்லாமல் துப்பாக்கி, 7 கத்திகள், பிளாஸ்டிக் பொருட்கள் இருந்தது தெரியவந்தது.

காருக்குள் இருந்த ஐந்து பேரிடம் விசாரித்தனர். அவர்கள், நீலகிரி மாவட்டம் கூடலூரை சேர்ந்த சையது (31), கேரள மாநிலம் நீலம்பூரை சேர்ந்த அலி (53), நவாஸ் (33), வழிக்கடவை சேர்ந்த சாகில் (23), மலப்புரத்தை சேர்ந்த ஹாரிஸ் (22) என்பதும், வனவிலங்குகளை வேட்டையாட வந்ததும் தெரியவந்தது. 5 பேரையும் பிடித்து, மாவட்ட உதவி வனக்காப்பாளர் மணிமாறன் தலைமையில் வனச்சரகர் சசிகுமாரிடம் போலீஸார் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட கார், துப்பாக்கி, 7 கத்திகளையும் வனத்துறையினரிடம் போலீஸார் ஒப்படைத்தனர்.

உடுமலை அருகே லஞ்சம் வாங்கிய பெண் உதவி பொறியாளர் கைது

சத்தியவாணி முத்து

உடுமலை

உடுமலை அருகே உள்ள கொங்கல்நகரை சேர்ந்தவர் சத்தியவாணி முத்து. அதே பகுதியிலுள்ள மின்வாரிய அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணியாற்றி வருகிறார். இவர், மின் மோட்டார் இணைப்புக்கு அனுமதி வழங்க ரூ.2,000 லஞ்சம் கேட்டதாக திருப்பூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத் துறைக்கு விவசாயி ஒருவர் புகார் தெரிவித்தார்.

இதையடுத்து லஞ்ச ஒழிப்பு போலீஸாரின் அறிவுரைப்படி, ரசாயனம் தடவிய ரூபாய் நோட்டுகளை உதவி பொறியாளர் சத்தியவாணி முத்துவிடம் விவசாயி வழங்கினார். அப்போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு ஆய்வாளர் சசிரேகா தலைமையிலான போலீஸார், கையும் களவுமாக சத்தியவாணிமுத்துவை கைது செய்தனர். இதுகுறித்து, லஞ்ச ஒழிப்பு போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

2002-ம் ஆண்டு SARFAESI சட்டத்தின் விதி 13(2)-ன்கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழ்குறிப்பிட்ட கடன்தாரர்கள், இணை-கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களாகிய தாங்கள், தங்களுடைய அசையா சொத்துக்களை அடமானமாக வைத்து **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்,** மூலம் கடன் வசதியினை பெற்று உள்ளீர்கள். நீங்கள் அனைவரும் செலுத்தவேண்டிய தவணைகளை செலுத்த தவறியதால் அந்தக் கணக்குகள் **வாராக்கடன் சொத்துக்கள்** என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** கடன் அளித்தவர் கீழ்குறிப்பிட்ட சட்டத்தின்படி, சட்டம் பிரிவு 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டம் பிரிவு 13(2) விதி 2-ன்கீழ் **கோரிக்கை அறிவிப்பு** வழங்கப்பட்ட தேதியிலிருந்து **60 நாட்களுக்குள்** கீழ்குறிப்பிட்ட கடன் கணக்கிலுள்ள கடன் பாக்கி மற்றும் வட்டி உட்பட, பத்தி எண்.2-ல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களாகிய தங்கள் செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டது, ஆனால் பல்வேறு காரணங்களால் அறிவிப்பினை தங்களுக்கு வழங்க முடியவில்லை.

வ. எண்.	கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்/ அடமானதாரர் பெயர்	கடன் கணக்கு எண். & கடன் தொகை	அமுல்படுத்தப்பட்ட அடமான சொத்தின் விபரம்	NPA நாள் & கோரிக்கை அறிவிப்பு நாள்	நிலுவை தொகை ரூ./ தேதியின்படி
1	1) M/s. Arthi Glass House, உரிமையாளர் திரு. பக்வான் T, எண்.57, R G நகர், R S புரம், கோயம்புத்தூர்-641001. மேலும் : திரு. பக்வான் T, த/பெ. தீகாராம், எண்.37/124, தெப்பகுளம் தெரு, எண்.2, சாரதா பள்ளி, கோயம்புத்தூர் தெற்கு-641001. 2) திரு. பிரகாஷ் சௌதிரி T, த/பெ. தீகாராம், எண். 37/124, தெப்பகுளம் தெரு, எண். 2, சாரதா பள்ளி, கோயம்புத்தூர் தெற்கு-641001. 3) திருமதி. ருக்மா B, க/பெ. பக்வான் T, எண்.37/124, தெப்பகுளம் தெரு, எண்.2, சாரதா பள்ளி, கோயம்புத்தூர் தெற்கு-641001.	கடன் கணக்கு எண். 30098648528119 & 45989660000018 கடன் தொகை: ரூ.30,00,000.00 & ரூ.3,69,760.00	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தாலுகா, கோயம்புத்தூர் டவுன், தியாகராயா புதிய தெருவின் கிழக்கு வரிசை சொத்து மற்றும் பின்வரும் எல்லைகள் மற்றும் அளவுகள் : வடக்கில் : கிழக்கு-மேற்கு லேன், கிழக்கில் : வடக்கு-தெற்கு தியாகராயா புதிய தெரு எண்.1, தெற்கில் : K.M. பழனிசாமி செட்டியார் அவர்களின் சொத்து, மேற்கில் : பருஷோத்தம செட்டியார் அவர்களின் வீடு. இதில் மத்திய, கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் : 26 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் : 26 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 27. 1/2 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம் : 27. 1/2 அடி. மொத்த அளவுகள் 715 சதுர அடி பரப்பு நிலம் மற்றும் ஆர்.சி.சி. மாடி கட்டிடம் உட்பட அத்துடன் கதவுகள், ஜன்னல்கள், பொருத்துதல்கள், மின்சார சர்வீஸ் இணைப்பு மற்றும் வைப்பு, தண்ணீர் குழாய் சர்வீஸ் இணைப்பு மற்றும் வைப்பு, பிளஷ்அவுட் கழிவறை, குளியலறை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட மற்ற உபகரணங்கள். B.L. No.22/99/H2 Dt. 5.3.1999 கோயம்புத்தூர் மாநகராட்சி. கதவு எண்கள். 112-114 தியாகராயா புதிய தெரு எண்.1, சொத்து வரி அசெஸ்மெண்ட் எண். 25229041. மின்சார சர்வீஸ் இணைப்பு எண். 131. தண்ணீர் குழாய் சர்வீஸ் இணைப்பு எண். 25125031. பழைய டவுன் சர்வே எண். 7/64. புதிய டவுன் சர்வே எண். 7/2496/3. சொத்தானது கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்டது.	NPA நாள் : 01.10.2024 & அறிவிப்பு அனுப்பிய நாள் 07.10.2024	மொத்த தொகை 03.10.2024 அன்றைய தேதியில் ரூ. 32,25,336.56
2	1) திரு. மயில்சாமி வெங்கடாசலம், த/பெ. வெங்கடாசலம், எண்.123(1), MGR நகர், எலச்சிபாளையம், கருமதாம்பட்டி, கோயம்புத்தூர்-641659. 2) திருமதி. ரிதீனா M, க/பெ. மயில்சாமி, எண்.123(1), MGR நகர், எலச்சிபாளையம், கருமதாம்பட்டி, கோயம்புத்தூர்-641659. 3) திருமதி. வச்சலாதேவி வெங்கடாசலம், க/பெ. வெங்கடாசலம், எண்.123(1), MGR நகர், எலச்சிபாளையம், கருமதாம்பட்டி, கோயம்புத்தூர்-641659.	கடன் கணக்கு எண். 30189430000428 கடன் தொகை: ரூ.5,25,000/-	திருப்பூர் பதிவு மாவட்டம், சூலூர் சார் பதிவு மாவட்டம், முன்னதாக பல்லடம் தாலுகா, தற்போது சூலூர் தாலுகா, கருமாதம்பட்டி கிராமம், பட்டா எண். 465/1415, நத்தம் எஸ்.எப். எண்.476/4-ல் நிலம் மற்றும் ஏசிசி ஷீட் கட்டிடம், மற்றும் பின்வரும் எல்லைகள் : வடக்கே : கிழக்கு மேற்கு பாதை, மேற்கே : மீனாக்குமாரி நிலம், தெற்கே : தேவி நிலம், கிழக்கே : அங்காத்தாள் நிலம். இதன் மத்திய கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் : 6 மீட்டர், கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் : 6 மீட்டர், தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் : 10 அடி, தெற்கு வடக்காக மேற்கு பக்கம் : 10 அடி. பரப்பளவு 60 சதுர மீட்டர் அல்லது 645.85 சதுர அடி பரப்பு நிலம் மற்றும் ஏசிசி ஷீட்டால் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் அதன் கதவுகள், ஜன்னல்கள், மின்சார இணைப்பு மற்றும் அதன் வைப்புகள், தண்ணீர் குழாய் இணைப்பு மற்றும் அதன் வைப்புகள், மற்றும் மேற்கண்ட சொத்தை அடைய லேஅவுட் சாலைகள் மற்றும் வழக்கமான சாலைகள் வழியாக வாகனங்களை இயக்கவும், நடக்கவும் உரிமை. சொத்து வரி அசெஸ்மெண்ட் எண்.168/003/900160, EB இணைப்பு எண்..03 -293 -002-524, தண்ணீர் குழாய் இணைப்பு எண்.168/005/900232, கதவு எண். 123(1) புதிய துணை-பிரிவின்படி சொத்தானது புதிய எஸ்.எப்.எண். 476/4சி1.	NPA நாள் : 01.10.2024 & அறிவிப்பு அனுப்பிய நாள் 07.10.2024	மொத்த தொகை 03.10.2024 அன்றைய தேதியில் ரூ. 5,34,966.41
3	1) M/s. சிவராஜ், உரிமையாளர் Siva Shanthi Constructions, எண்.18/72, சோவண்ட்டம்மன் கோவில் தெரு, ஒடையகுளம், கோயம்புத்தூர்-642129. மேலும் : திரு. O P சிவராஜ் P, த/பெ. பாப்புசாமி, எண். 18/72, சோவண்ட்டம்மன் கோவில் தெரு, ஒடையகுளம், கோயம்புத்தூர்-642129. 2) திருமதி. சாந்தி, க/பெ. சிவராஜ், எண். 18/72, சோவண்ட்டம்மன் கோவில் தெரு, ஒடையகுளம், கோயம்புத்தூர்-642129.	கடன் கணக்கு எண். 46559440000083 & 46559670000031 கடன் தொகை: ரூ.14,95,956/-	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை சார் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி தாலுகா, ஒடையகுளம் நத்தம் எஸ்.எப். எண்.933, சௌண்டம்மன் கோவில் தெரு, வடக்கு பார்த்த ஆர்.சி.சி வீடு, ஏரியா 352 சதுர அடி, மொத்த ஏரியா 747. 1/4 சதுர அடியில், கதவு எண். 18/72, வார்டு எண்.11 கொண்டது, எல்லைகள் : கிழக்கில் : கன்னியம்மாள் அவர்களின் முன்புறம் வீட்டு பகுதி, மேற்கில் : செல்வராஜ் அவர்களின் முன் மற்றும் பின்புறம் வீட்டு பகுதி, வடக்கில் : வீராசாமி மற்றும் திருமலைசாமி போயன் ஆகியோரின் வீட்டு சொத்து, தெற்கில் : O.S. பழனிசாமி கவுண்டர் அவர்களால் வழங்கிய கிழக்கு மேற்கு சாலை. அளவுகள் : மேற்கு பக்கம் தெற்கு வடக்கு 46 அடி, கிழக்கு பக்கம் தெற்கு வடக்கு 46 அடி, வடக்கு பக்கம் கிழக்கு மேற்கு 16. 1/4 அடி, தெற்கு பக்கம் கிழக்கு மேற்கு 16. 1/4 அடி, கிழக்கு மேற்கு : 16. 1/4 அடி இருபக்கமும், வடக்கு தெற்கு : 46 அடி இருபக்கமும் மற்றும் மற்ற அனைத்து வழக்கமான உரிமைகள்.	NPA நாள் : 01.10.2024 & அறிவிப்பு அனுப்பிய நாள் 07.10.2024	மொத்த தொகை 03.10.2024 அன்றைய தேதியில் ரூ. 13,20,384.48
4	1) திரு. ரத்தினசாமி, த/பெ. குமரன், எண். 194, இந்திரா காலனி குடோன் புதூர், தெற்கு அவினாசிபாளையம், திருப்பூர் - 638660 2) திருமதி. தேவி R, க/பெ. ரத்தினசாமி, எண். 194, இந்திரா காலனி குடோன் புதூர், தெற்கு அவினாசிபாளையம், திருப்பூர் - 638660	கடன் கணக்கு எண். 33439430001130 & 33439430001742 கடன் தொகை: ரூ.14,82,094/-	திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தெற்கு தாலுகா, தெற்கு அவினாசிபாளையம் கிராமம், எஸ்.எப்.எண். 629, புஞ்சை ஏக்கர் 7.9, பிரிக்கப்பட்ட துணை பிரிவு எஸ்.எப்.எண். 629/32, பட்டா எண். 186 இதன் பின்வருபவை : வடக்கே : நாச்சி நிலம், தெற்கே : மற்றொருவர் குமரன் நிலம், மேற்கே : தெற்கு வடக்கு சாலை, கிழக்கே : பழனி மற்றும் குடும்ப நிலம். இதன் மத்திய, கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் : 66 அடி, கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் : 66 அடி, தெற்கு-வடக்காக கிழக்கு பக்கம் : 40 அடி, தெற்கு-வடக்காக மேற்கு பக்கம் : 40 அடி, பரப்பளவு 2640 சதுர அடி அல்லது 245.26 சதுர மீட்டர் நிலம் மற்றும் ஆர்சிசி கட்டிடம் மற்றும் அதன் கதவுகள், பொருத்துதல்கள் மற்றும் உதிரிகள் அத்துடன் லேஅவுட் சாலை பொது உபயோகம் மற்றும் பொது பாதைகள் உரிமைகள், இதர.	NPA நாள் : 01.10.2024 & அறிவிப்பு அனுப்பிய நாள் 09.10.2024	மொத்த தொகை 06.10.2024 அன்றைய தேதியில் ரூ. 14,75,917.97
5	1) திரு. செந்தில்குமார் B, த/பெ. பூமிபாலகன், எண். 32, திலகர் தெரு, ஏரிபாளையம், உடுமலைபேட்-642126. 2) திருமதி. ஸ்ரீதேவி S, க/பெ. செந்தில்குமார் B, எண். 32, திலகர் தெரு, ஏரிபாளையம், உடுமலைபேட்-642126.	கடன் கணக்கு எண். 46559430000910 & 446559430000491 கடன் தொகை: ரூ.25,81,000/-	திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைபேட் சார் பதிவு மாவட்டம், உடுமலைபேட் தாலுகா, உடுமலைபேட் நகராட்சி, ஏரிபாளையம் ஊர்கட்டில், திலகர் தெரு, இதில் நிலம் மற்றும் வீடு, பின்வரும் எல்லைகள் மற்றும் அளவுகள் : வடக்கே : திலகர் தெரு (டி.எஸ்.எண்.44), தெற்கே : திருமூர்த்தி முதலியார் வீட்டு சொத்து, டி.எஸ்.எண்.51 மற்றும் ஜெயகுமார் வீட்டு சொத்து. டி.எஸ்.எண்.50, மேற்கே : தண்டபாணி, சக்திவேல் அவர்களின் சொத்து (டி.எஸ்.எண். 52/பகுதி), கிழக்கே : கனகசபாபதி முதலியார் வீடு (எஸ்.எப்.எண். 49). இதன் மத்திய, கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் : 4.4 மீட்டர், கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் : 4.9 மீட்டர், தெற்கு-வடக்காக கிழக்கு பக்கம் : 11.3 மீட்டர், தெற்கு-வடக்காக மேற்கு பக்கம் : 11.7 மீட்டர். பரப்பளவு 51 சதுர மீட்டர் அல்லது 549 சதுர அடி நிலம் மற்றும் ஆர்சிசி கட்டிடம் மற்றும் அதன் கதவுகள், பொருத்துதல்கள் மற்றும் உதிரிகள் அத்துடன் லேஅவுட் சாலைகள் பொது உபயோகம் மற்றும் பொது பாதை உரிமைகள் இதர. கதவு எண்.33, திலகர் தெரு. சொத்து வரி அசெஸ்மெண்ட் எண். 157-001-00066, மின்சார சர்வீஸ் எண். 03-301-006-1775. மேற்குறிப்பிட்ட சொத்தானது டவுன் சர்வே வார்டு பி, பிளாக் -2, டி.எஸ்.எண். 52/பகுதி, உடுமலைபேட் நகராட்சி வார்டு எண்.1, கிராமம் நத்தம் 134எம்.	NPA நாள் : 01.10.2024 & அறிவிப்பு அனுப்பிய நாள் 09.10.2024	மொத்த தொகை 06.10.2024 அன்றைய தேதியில் ரூ. 25,26,466.00

எனவே, கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரருக்கு வ.எண்.2-ல் குறிப்பிட்டுள்ளபடி அந்தந்த கடன்தாரர்/இணை-கடன்தாரர் எதிராக வ.எண்.6-ல் குறிப்பிட்டுள்ளபடி மொத்த தொகையை செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியான **60 நாட்களுக்குள்** வ.எண்.6-ல் குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் வட்டி மற்றும் பணம் செலுத்தும் தேதிவரை செலுத்தப்பட வேண்டிய பிற கட்டணங்களுடன் சேர்த்து அந்தந்த கடன் கணக்கில் செலுத்த வேண்டும், அவ்வாறு தவறும்பட்சத்தில் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்,** மேற்குறிப்பிட்டுள்ள வ.எண்.4 குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாதுகாப்பு வட்டி அமலாக்கத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும். நிதி சட்டத்தின்கீழ் கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு எதிராக **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** உரிமைகள் மற்றும் தீர்வுகளுக்கு பாரபட்சமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(13)-ன்படி பாதுகாப்பை அப்பறப்படுத்தவோ அல்லது கையாளவோ அல்லது கடன் வழங்கியவரின் முன் அனுமதியின்றி அடமான சொத்தினை குத்தகை அல்லது வேறு வழியின் மூலம் பரிமாற்றம் செய்யவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாள் : 10.10.2024 இடம் : கோயம்புத்தூர் & திருப்பூர் Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

உதகை-குன்னூர் இடையே நவ.3 வரை சிறப்பு மலை ரயில் சேவை நீட்டிப்பு

உதகை

நீலகிரி மாவட்டத்துக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்காக, உதகை-குன்னூரிடையே சிறப்பு மலை ரயில் சேவை வரும் 12, 13 மற்றும் நவ